பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 11 ஞாயிற்றுக்கிழமை 23.02.2025 | அதிர்வு 207


## வத்திராயன் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களில் ஒருவர் இன்று உயிரிழப்பு

யாழ். வடமராட்சி கிழக்கில் தாக்குதல் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்தவர்களில் ஒருவர் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

03▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் தவிர்ந்த

# சகல தமிழ்த் தேசியத் தரப்புகளும் தேர்தலில் ஐக்கியப்பட இணக்கம்

## இன்றைய இணுவில் கூட்டத்தில் முடிவு சங்குச் சின்னத்தில் இறங்கத் தீர்மானம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

விரைவில் நடைபெறப் போகும் உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இலங்கைத் தமிழரசு கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய இரண்டும் தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் தரப்புக்களும் ஒன்றுபட்டு ஓரணியில் செயற்படுவதற்கும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் சேர்ந்து களமிறங்கவும் இன்று கொள்கையளவில் பூர்வாங்க இணக்கம் கண்டன.

இன்று முற்பகல் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள ஜொலி மண்டபத்தில் நடைபெற்ற இக்கட்சிகள் மற்றும் தரப்புகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு பூர்வாங்க இணக்கம் காணப்பட்டதாக அறிய வந்தது.

03▶

## மட்டு. போதனா வைத்தியசாலையின் மலசலகூடத்தில் குழந்தையைப் பெற்று யன்னல் வழியாக வீசிய மாணவி



### இருவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 18 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் மலசலகூடத்தில் குழந்தையைப் பெற்று யன்னல் வழியாக வீசிய சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

18 வயதுடைய மாணவி ஒருவர் நிறைமாதக் கர்ப்பிணி என்பதை மறைத்து வயிற்று வலி எனத் தெரிவித்து இன்று அதிகாலை 3.30 மணியளவில் மட்டக்களப்பு போதன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியர் சரியான முறையில் சோதனையிடாத நிலையில் மாணவிக்கு ஊசி மூலமாக வயிற்று வலிக்கான வலி நிவாரண மருந்து கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அதிகாலை 5 மணியளவில் மாணவி மலசலகூடத்துக்குச் சென்று குழந்தையைப் பெற்று யன்னல் வழியாக

03▶

## தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை

# பாதாள உலகக் குழுக்களுக்கு அடியோடு முடிவு கட்டுவோம்!

### கண்டியில் ஜனாதிபதி திட்டவட்டம்

**தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

கண்டிக்கு இன்று சென்றிருந்த ஜனாதிபதி, தலதா மாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்டார். மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெற்றார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அத்துடன், பாதாள உலகக் குழுக்கள் ஒடுக்கப்படும் எனவும், அதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது எனவும் ஜனாதிபதி கூறினார்.






# கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற பஸ்ஸில் கைவிடப்பட்ட பையில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு!

**(ராமு தனராஜா)**

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் பெல்மடுல்ல பகுதிக்கும் ஓபநாயக பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏறிய நபர் ஒருவரின் கைவிடப்பட்ட பை ஒன்றில் இருந்து சிறிய இரும்புப் பெட்டி ஒன்றில் இருந்து 9 மில்லிமீற்றர் ரக தோட்டாக்கள் 113, ரி - 56 ரக தோட்டாக்கள் 9, 84 எஸ் ரக தோட்டா 1 என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று நண்பகல் 12.45 மணியளவில் கொழும்பில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் பெல்மடுல்ல பகுதிக்கும் ஓபநாயக பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் சந்தேகத்துக்கிடமான மேற்படி நபர் பை ஒன்றுடன் பஸ்ஸில் ஏறி பையுடன் நின்று கொண்டு பயணித்துள்ளார் எனவும், இதன்போது அருகில் அமர்ந்து பயணித்த ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் அந்த நபர் மீது சந்தேகமடைந்து அவரை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்ததை அடுத்து மேற்படி சந்தேகநபர் பதற்றமுற்ற நிலையில் அவ்விடத்தில் இருந்து அகன்று சென்றுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது அந்த பஸ் தேநீர் இடைவேளைக்காக ஊவதென்ன பகுதியில் நிறுத்திய பின்னர் தேநீர் அருந்திவிட்டு மீண்டும் பஸ் பயணிக்கும் போது மேற்படி சந்தேகநபர் பஸ்ஸில் பயணிக்கவில்லை என்பதுடன் அவர் கொண்டு வந்த பொதி பஸ்ஸில் இருந்ததையும் அந்த ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி அவதானித்துள்ளார்.

பின்னர் பதுளை பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பதுளை பொலிஸார் பண்டாரவளை தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பண்டாரவளை நகரில் பஸ் நிறுத்தப்பட்ட வேளையில் அந்தப் பொதியை பண்டாரவளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல, பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹன ஆகியோரின் ஆலோசனையின் பேரில் பண்டாரவளை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழில் ரயில்கள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்திய சிறுவர்கள் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணத்தில் ரயில்கள் மீது கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டு வந்த மூன்று சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பயணிக்கும் ரயில்கள் மீது கடந்த சில தினங்களாக அரியாலை பகுதியில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன.

இந்தத் தாக்குதலில் ரயில்களின் கண்ணாடிகள் சேதமடைந்தும், பயணி ஒருவர் காயமடைந்தும் இருந்தார்.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ரயில் நிலைய அதிபரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் ரயில் பயணி ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் எடுத்த காணொளி ஒன்றில் மூன்று சிறுவர்கள் ரயில் மீது கல் வீச்சுத் தாக்குதலை நடத்துவது பதிவாகி இருந்தது.

அந்தக் காணொளியின் அடிப்படையில் மூன்று சிறுவர்களும் அடையாளம் காணப்பட்டு நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வத்திராயன்...

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி மாலை நால்வர் மீது வவுனியாவில் இருந்து வந்தவர்களால் மோசமான தாக்குதல் நடத்தப்பபட்டது.

குடும்பத்தகராறின் காரணமாக வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபர் ஒருவர் தனது தந்தை மீதும், சகோதரன் மீதும், சகோதரனின் மகன் மீதும், சகோதரனின் மனைவி மீதும் வவுனியா பகுதியில் இருந்து வாகனம் ஒன்றில் ஆட்களை அழைத்து வந்து வீட்டுக்குள் புகுந்து கம்பி, கற்களால் தாக்குதல் நடத்தியிருந்தார்.

அடிகாயங்களுக்குள்ளான நால்வரும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பலத்த காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த வத்திராயன் பகுதியைச் சேர்ந்த நபர் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

### மட்டு. போதனா...

வீசியுள்ளார்.

குழந்தை யன்னலில் கீழ் உள்ள பிளேற்றில் வீழ்ந்து அழுகுரல் கேட்டதை யடுத்து தாதியர்கள் அங்கு சென்றபோதே மாணவி குழந்தையைப் பெற்றுள்ளார் என அவர்களுக்குத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து குழந்தை மீட்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதுடன், தாய்க்கும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி குழந்தையும் தாயும் பாதுகாப்பாக உள்ளனர் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி கலாறஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சகல தமிழ்த் தேசிய...

இந்தக் கூட்டணியில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக தமிழரசு கட்சி, சமத்துவ கட்சி ஆகிய 9 கட்சிகளும் இணைந்து கொண்டுள்ளன என்று கூறப்பட்டது.

தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய கலந்துரையாடலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. ரவீந்திரா (வேந்தன்), தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ், ஜனநாயக தமிழரசு கட்சி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மற்றும் சமத்துவ கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட இன்னும் சிலர் கலந்துகொண்டிருந்தனர்.

சமத்துவக் கட்சி சார்பில் சந்திரகுமார், நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் மணிவண்ணன், ஜனநாயக தமிழரசுக் கட்சியில் சட்டத்தரணி தவராஜா சார்பில் நாவலன், சரவணபவன் சார்பில் பிரதாப் போன்றோர் பங்குபற்றினர் எனத் தெரிய வருகிறது.

கூட்டத்தில் பங்கு பற்றிய அருந்தவபாலன் ஆசிரியர் தாம் தனி மனிதராக இருந்தாலும், தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் முயற்சிக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் தாம் வழங்குவார் எனத் தெரிவித்து உரையாற்றி விட்டுப் புறப்பட்டார்.

விக்னேஸ்வரனின் கட்சியில் பங்கு பற்றிய மணிவண்ணன் இவ்விடயத்தில் கட்சியின் செயலாளர் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடிப் பதில் கூறுவதாக தெரிவித்து வெளியில் சென்றார். எனினும் தொலைபேசியில் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் உரையாடிய பின்னர் பொது இணக்கப்பாட்டுக்குத் தாங்களும் சம்மதிக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டார்.

ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சார்பில் பங்கு பற்றிய ஆசிரியர் தயாளனும் ஆசிரியர் கஜேந்திரனும் இந்த இணக்க ஏற்பாட்டுக்கு தங்கள் தரப்பின் கொள்கை அளவிலான சம்மதத்தைத் தெரிவித்தனர் என்றும் எனினும் தமது இயக்கத்துடன் கலந்து பேசி முடிவைத் தெரிவிப்பார்கள் என கோடி காட்டினர் எனக் கூறப்பட்டது.

பொது இணக்கத்துடன் செயற்படுவது தொடர்பில் இலங்கைத் தமிழரசு கட்சியுடனும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸுடனும் தொடர்ந்து பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்று இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

# சஞ்சீவ படுகொலை: மேலும் மூவர் கைது!

## இதுவரை 8 பேர் சிக்கினர்



கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டு உயிரிழந்த கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதனடிப்படையில், இதுவரை இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் கம்பஹா மற்றும் உடுகம்பொல பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்ததற்காகவும், துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதற்கு முதல் நாள் துப்பாக்கிச்சூடு நடத்தியவருக்குத் துப்பாக்கியை வழங்கியதற்காகவும் கம்பஹா, மல்வத்த வீதி, அஸ்கிரிய பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய தமிந்து லக்ஷான் என்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், துப்பாக்கிச்சூடு நடத்திய வரையும் மற்றைய சந்தேகநபரையும் ஓட்டோவில் ஏற்றிச் சென்று தப்பிச் செல்வதற்கு உதவியதற்காக, தமித் அஞ்சன நயனஜித் என்ற 25 வயதுடைய நபரும், உடுகம்பொல, அஸ்கிரியபொல பகுதியைச் சேர்ந்த 19 வயது சாமோத் கிம்ஹான் என்ற இளைஞரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# யாழ் அரச அதிபரின் வாகனம் கந்தர்மடம் சந்தியில் விபத்தில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளரின் பதவிநிலை பெயர்ப் பலகை கொண்ட வாகனம் இன்று யாழ்ப்பாணம் பலாலி வீதியில், கந்தர்மடம் சந்தியில் விபத்துக்குள்ளாகி முழுமையாகச் சேதமடைந்தது.

இந்த விபத்தில் சிக்கிய வாகனத்தின் இருக்கையில் மாட்டிக் கொண்ட இளைஞர் ஒருவர் பெரும் பிரயத்தனத்தின் பின்னர் - சுமார் 45 நிமிட நேரப் போராட்டத்தின் பின்பு - பாதிப்பு ஏதுமின்றி மீட்கப்பட்டார்.

வாகனம் விபத்துக்குள்ளான போது, யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளரோ அவரது சாரதியோ அதில் பயணிக்கவில்லை என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட செயலாளரின் மகன், தந்தையின் வாகனத்தைச் செலுத்திச் சென்றார் எனவும் அவரது நண்பர் வாகனத்துக்குள் சிக்கினார் என்றும் சம்பவ இடத்தில் தெரிவிக்கப்பட்டது.

வாகனம் மரம் ஒன்றுடன் மோதியே கடும் சேதமடைந்திருந்தது. அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் இந்த வாகனத்துடன் மோதுண்டதில் கடுஞ்சேதமடைந்தது.

அரசு அதிபரின் பதவி நிலை குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது அவரது உத்தியோகபூர்வ வாகனம் அல்ல என்றும், அவரது தனிப்பட்ட வாகனத்தை அவரது மகன் செலுத்திச் சென்றார் என்றும் முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.





# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

21, 22, 23.02.2025

CLICK HERE VIDEO



LOWEST PRICE 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் கோழி



LOWEST PRICE LB 9.99$ Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE LB 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET

விளைமீன்



LOWEST PRICE 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET

உளுந்து



LOWEST PRICE 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET

இறால்



LOWEST PRICE 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET

சுறா பாரை

## Gunaam's Super Market இந்த வாரம் அள்ளித்தரும் Super Deal.

| | | | |
|---|---|---|---|
| 400g புளி | - $2.49 | முழு King fish | - $5.991b |
| Woadiya Tin fish 3 For | - $10.00 | சல்மன் fish | - $7.991b |
| பிள்ளையார் நல்லெண்ணெய் | - $9.99 | See Bream Fish | - $7.991b |
| 41b gunaam's உளுந்து | - $4.99 | சுராப் பாரை | - $7.991b |
| 41b மைசூர் பருப்பு | - $4.99 | நெத்தலி மீன் | - $7.991b |
| Milo Dring 5 For | - $5.99 | மஞ்சல் பாரை | - $5.991b |
| Ceycan செத்தல்மிளகாய் 400g | - $4.99 | இறால் | - $4.991b |
| Red Ruby Curry Powder - $12.99 | | ஊர் ஆட்டிறைச்சி | - $9.991b |
| Brown Bettry Cocount Powder 1 kg | - $8.99 | கோழிக் கால் | - $1.991b |
| 10 cup rice Cooker | - $49.99 | காட்டுப் பன்றி | - $5.991b |
| அப்பச்சட்டி | - $20.00 | Ceylon பாரை | - $8.991b |
| Big கல் உரல் | - $39.99 | Ceylon கடல் விறால் | - $8.991b |
| Big கருங்கல் அம்மி | - $199.00 | Big ஊர்க் கோழி | - $8.99 |
| Maharaja அரிசி மா | - $8.99 | கருந்திரளி | - $4.99 1b |
| Maharaja Curry Powder | - $12.99 | ஓரா Fish | - $7.99 1b |
| Ceylon விளைமீன் | - $7.991b | கும்பிளா Fish | - $7.99 1b |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருத்தந்தையின் எளிமை

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸின்(வயது 88) உடல்நிலை மிகவும் மோசடமடைந்துள்ளதாக வத்திகான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் மூச்சுக்குழாய் அழற்சி காரணமாக கடந்த 14 ஆம் திகதி ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் அவருக்கு நுரையீரலில் நிமோனியாத் தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனால் வத்திகான் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ் பங்கேற்க இருந்த நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பத்து நாள்கள் ஆகிவிட்ட நிலையில், தற்போதுவரை அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், போப் பிரான்சிஸ் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது என வத்திகான் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அவர் குணமடைய பிரார்த்தனை செய்யும்படி கத்தோலிக்கர்களை வத்திகான் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. வத்திகான் நிர்வாகம் வெளியிட்ட இந்த அறிக்கையால் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் கவலை அடைந்துள்ளனர்.

“அவர் ஆபத்திலிருந்து மீளவில்லை” என்று அவரது வைத்தியர் லூய்கி கார்போன் கூறினார்.

“எனவே அனைத்து பலவீனமான நோயாளிகளையும் போலவே அவர் தற்போது இருக்கிறார்கள் என்று நான் கூறுகிறேன். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சமநிலையற்றவராக மாறுவதற்கு மிகக் குறைந்த நேரம் ஆகும்.” என்று தெரிவித்துள்ளார்.

மேலும், தமது உடல் நிலை தொடர்பில் ஒளிவு மறைவின்றி உலக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் 2013, மார்ச் 13ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வத்திக்கான் நகரின் தலைவர் அவர்தான்.

அவர் அர்ஜென்ரீனா நாட்டைச் சார்ந்தவர். புவனர்ஸ் அயர்ஸ் உயர் மறைமாவட்டத்தின் பேராயராகப் பணியாற்றியவர்.

தென்னமெரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை இவரே. மேலும், இயேசுசபையிலிருந்து திருத்தந்தைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நபரும் இவர் ஆவார். மூன்றாம் கிரகோரிக்கு பின்பு கடந்த 1200 ஆண்டுகளில் ஐரோப்பாவுக்கு வெளியேஇருந்துதேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

இவரது இயற்பெயர் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ. 2005ஆம் ஆண்டு நடந்த திருத்தந்தைத் தேர்தல் அவையில் பதினாறாம் பெனடிக்ட் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அப்போது கர்தினால்-வாக்காளராகத் தேர்தலில் பங்கேற்ற பெர்கோலியோவுக்கு 40 வாக்குகள் கிடைத்தன எனக் கூறப்படுகிறது. ஆயினும் கர்தினால் பெர்கோலியோ தமக்குத் திருத்தந்தைப் பதவிக்காக வாக்குகள் அளிக்க வேண்டாம் என்று உடன் கர்தினால்மார்களிடம் அழாக் குறையாகக் கேட்டுக்கொண்டார் எனச் சில செய்திகள் கூறுகின்றன.

பின்னர் 2013 இல் அவர் திருத்தந்தையாகத் தெரிவான போது அவரின் குறிக்கோளுரை ‘எளியவராயினும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்’ என்று அறிவிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் பரந்து வாழும் பல நூறு கோடி கிறிஸ்தவர்களின் திருத்தந்தையாக கடந்த பதினொரு வருடங்களாக அவர் விளங்கிய போதும் இறைமகனாக எளிய முன் மாதிரி வாழ்வையே அவர் உலகுக்குக் காட்டி நிற்கின்றார் என்பதுதான் அவர் நமக்குத் தெரிவிக்கும் முக்கிய செய்தியாகும்.





# கிளின் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தில் யாழ். ரயில் நிலையம் தூய்மையாக்கல்

(பிரபாகரன் டிலக்சன்)

கிளின் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 100 ரயில் நிலையங்களைத் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை தூய்மையாக்கும் பணி நேற்று (22) இடம்பெற்றது.

யாழ். மாவட்ட சாரணர் இயக்கத்தின் பங்களிப்பில் தூய்மையாக்கல் பணி யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பிரட்லி ஜெனட், யாழ். ரயில் நிலைய பிரதம அதிபர் தேவராஜா சர்மா சுரேந்திரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வருணன், சேவ் த லைவ்ப் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ராகுலன் மற்றும் சாரணர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் தூய்மையாக்கல் பணியை ஆரம்பித்த சாரணர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அங்கிருந்து ரயில் நிலைய வீதியூடாக வைத்தியசாலை வீதிவரை நடைபவனியாக வந்தடைந்து வீதிகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்தவாறு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்தனர்.



யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும் சாரணர்கள் தூய்மையாக்கல் பணியில் ஈடுபட்டனர்.






# சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் நினைவாக வவுனியா ரயில் நிலையங்கள் அழகுபடுத்தல்

(கி.வசந்தன்)

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ரொபேர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இலங்கை சாரண சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் சாரணர்கள் வவுனியாவிலுள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் நேற்று (22) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்படி வவுனியா ரயில் நிலையம், தாண்டிக்குளம் ரயில் நிலையம், ஓமந்தை ரயில் நிலையம், புளியங்குளம் ரயில் நிலையம், செட்டிக்குளம் ரயில் நிலையம் ஆகிய ரயில் நிலையங்களை ஒரே நாளில், ஒரே நேரத்தில் அழகுபடுத்தும் செயற்பாடுகளில் வவுனியா சாரணர்கள் ஈடுபட்டனர்.

இந்தத் திட்டம் தேசிய சாரணர் தலைமையகத்தின் கருத்தாக்கம் மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து செயற்படும் தேசிய வேலைத்திட்டமாகும்.

இதன் பிரதான நிகழ்வு வவுனியா பிரதான ரயில் நிலையத்தில் இடம்பெற்றது. ரயில் நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள பிளாஸ்டிக், பொலித்தீன், ஏனைய கழிவுகளை அகற்றி ரயில் நிலையத்தைத் துய்மையான இடமாக மாற்றியமைத்தனர்.

இந்த நிகழ்வில், வவுனியா ரயிவேத் திணைக்கள அதிபர் சி.அகிலேஸ்வரன், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமை அலுவலக உதவி ஆணையாளர் எஸ்.மயூரன், மாவட்ட சாரணங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், திரி சாரணர்கள், சமாதானத்துக்கான தூதுவர் குழுவினர், பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# கலைஞர்கள் கௌரவிப்பு விழாவை அரச விழாவாக நடத்த நடவடிக்கை!

## எடுக்கப்படும் என்கிறார் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

(பொகவந்தலாவை)

மலையகத்தில் உள்ள கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழாவை இந்து கலாச்சார புத்த சாசன அமைச்சின் ஊடாகக் கலந்துரையாடி இந்தக் கௌரவிப்பு விழாவை அரச விழாவாக மலையகத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பெருந்தோட்டம் மற்றும் உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிற்ப செதுக்கள் ஓவிய கலைஞர்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்த கலைஞர்களின் கௌரவிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உறையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் உட்பட அமைச்சின் செயலாளர் வசந்தமூர்த்தி, அமைச்சின் ஊடகச் செயலாளர் அஜித் குமார், அதிபர்கள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்,

மலையகத்துக்கு அரசியல் மாற்றமென்பது முக்கியமானது அந்த மாற்றம் தற்போது நிறைவேறியிருக்கிறது. இரத்தினபுரி மாவட்டம் என்பது கடந்த காலங்களில் அரசியலில் அனாதையாக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட ஒரு மாவட்டம் மலையகத்துக்கென எனக்கு வழங்கப்பட்ட அமைச்சின் ஊடாகக் கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மலையக பெருந்தோட்ட மக்கள் 14 மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்த அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்களை நாம் சம ரீதியாகப் பார்க்க வேண்டியுள்ளது. அம்மக்களுக்கான வாய்ப்பை வழங்கவேண்டும். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் அம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியது எமது முக்கிய கடப்பாடாக உள்ளது.

மாத்தறையில் தெனியாய என்ற பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்கள் கலாச்சாரம், மொழி என்பவற்றை இழந்து வாழ கூடிய ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் மொழியைக் கூடக் கற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலையில் அந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கல்வியின் ஊடாகத்தான் கலாச்சாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். அந்தப் பகுதி மக்களின் பிள்ளைகளுக்கு எதிர்வரும் காலங்களில் தமிழ் மொழி ஊடாகக் கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

200 வருட மலையகத்தின் வரலாற்றை கொண்ட தமிழ் மக்களாகிய நாம் ஏனைய சமுகங்களை ஒப்பிடும் போது பலவருடங்களாக நாம் பின்னோக்கியிருக்கின்றோம். இதனை நாம் எவ்வாறு சீர் செய்வது. கடந்த கால ஆட்சியாளர்களைக் கூறை குறி கொண்டிருக்க முடியாது. மலையகத்தில் உள்ள அனைத்து அரசியலில் பிரதநிதிகளுக்கு நாம் அழைப்பு விடுகிறோம். எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இந்தத் தேசிய மக்கள் சக்தியின் அரசு மக்களின் அரசு. இது உழைக்கும் மக்களின் அரசு. இது உழைக்கும் மக்களின் குறைகளை கண்டறிந்துள்ளது. வெகுவிரைவில் மக்களின் பிரச்சினைகள் கட்டம் கட்டமாகத் தீர்க்கப்படும்.

மலையக மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு இந்த வரவு – செலவு திட்டத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விக்கு நாங்கள் முன்னுரிமை வழங்குகின்றோம். அதில் மழையக பாடசாலைகளுக்கு பாரிய அபிவிருத்தி திட்டங்களை எமது அரசு ஊடாக முன்னெடுப்போம்.– என்றார்.

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் சிவராத்திரி!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை (26) மகா சிவராத்திரி நடைபெறவுள்ளது.

அதற்கான ஏற்பாட்டுகளுக்கான நிர்வாக சபை கூட்டம் இன்று (23) ஞாயிற்றுக்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் கே.ஜெயசிறில் தலைமையில் ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா சிவராத்திரி மற்றும் சிவனாலய புதிய கட்டுமானம் மற்றும் சிறப்பு மலர் பற்றி விளக்கமளித்தார்.

வழமைபோல் நான்கு சாமப் பூஜைகளுடன் சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. மலர்க் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

அதேவேளை, ஆலயத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சிவனாலயம் அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த திருமதி கமலா விவேகானந்தம் குடும்பத்தினரால் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் நவீன மயமாக்கப்பட்டு வருகிறது. வெகுவிரைவில் இந்தச் சிவன் ஆலயம் கும்பாபிஷேகம் காணவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கற்பிட்டி கண்டக்குளி குடா கடற்கரை தூய்மைப்படுத்தல்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

ஆரோக்கியமான நாடு அழகான வாழ்க்கை உள்ளடக்கிய ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தின் உல்லாசத்துறையை மேம்படுத்தும் வகையில் அழகான கடற்கரை எனும் கருப்பொருளில் கற்பிட்டி உதவி பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தலைமையில் கண்டக்குளி குடா கடற்கரையை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷத் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். நிஸ்வர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.டீ.எம். தாஸ் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எச். ஹுஸ்னி, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர், முப்படையினர் மற்றும் கண்ட்குளி குடா பிரதேசவாசிகள் என சகல தரப்பினரும் கலந்து கொண்ட னர்.

இன்று கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இந்தக் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத் திட்டம் இடம்பெற்றது.





# உணவு பாதுகாப்பு, உணவகங்களின் தரம் தொடர்பான விசேட கூட்டம் கல்முனையில்!

**(றியாஸ் ஆதம்)**

கல்முனை பிராந்திய உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விசேட மீளாய்வு கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ டீன் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கூட்டம் சனிக்கிழமை (22) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.லபீர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பொது சுகாதார பரிசோதர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் விளக்கக் காட்சிகளுடன் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்பட்டது.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களைப் பதிவு செய்யும்போது சுகாதார ரீதியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும் கல்முனை மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடுவது என்று இக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.





# சாதனையாளர்கள் கௌரவிப்பு!




(நிப்ராஸ் லத்தீப் )

சாய்ந்தமருது, லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய புலமை சீட்டுக்களையும், இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஊடக ஆளுமைகள், கல்விமான்களை, ஸ்ரீ லங்கா அல்– மீஸான் பௌண்டஷன் பாராட்டி கௌரவித்த நிகழ்வு, ஸ்ரீ லங்கா அல்– மீஸான் பௌண்டஷன் ஆளுநர் சபை உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் நிறுவன தவிசாளர் நூருல் ஹுதா உமரின் தலைமையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை கல்வி வலய பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகவும் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் பிரதம உரையாளராகவும், சமூர்த்தி திணைக்கள பிரதம கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், அம்பாறை அரச அதிபர் பிரிவின் பிரதம பொறியியலாளர் எந்திரி ஏ.எம். சாஹிர், கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், என். வருணியா, எம்.எச். றியாசா, எம்.எல்.எம்.முதர்ரிஸ், அஸ்மா அப்துல் மலிக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.எம். அன்ஸார், சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய அதிபர் எம். ஐ.சம்சுதீன் அடங்கலாக தேசிய பாடசாலைகளின் அதிபர்கள், அல்– மீஸான் பௌண்டஷன் ஆளுநர் சபை உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், சாய்ந்தமருது, நாவிதன்வெளி, கல்முனை கோட்ட அதிபர்கள், பிரதேச சமூக நல செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய புலமையாளர்கள், 2023 இல் கல்முனை வலயத்தில் தேசிய ரீதியாக சாதிக்க காரணமாக இருந்த வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.எஸ். எஸ். நஜீம், கல்முனை மாநகர சபை மற்றும் கல்முனை வலயக் கணக்காளராக இருந்து பதவி உயர்வு பெற்ற வை. ஹபிபுல்லாஹ், ஊடக, கலை இலக்கிய, சமூக சேவைக்கு பங்களிப்பு செய்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.




# முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று!

(றிபாஸ்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒலுவில் கிரீன் வில்லாஹ் ஹோட்டலில் இன்று (23) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் ஏ. மாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு நம்பிக்கையாளர் சபையின் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீத் பிரதம அதிதியாகவும், முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ. உதுமாலெப்பை கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டார்.

நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக ஏ.பைறுஸ், செயலாளராக எம்.எஸ். எம்.அஷ்ரப், பொருளாளராக எம்.எச். ஜெயினுதீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உபதலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப்.றிபாஸ்க்கு அமைப்பால் நாள் குறிப்போடு வழங்கி வைக்கப்பட்டது.





# கற்றல் உபகரணம் வழங்கல்!



(ஹஸ்பர் ஏ.எச்.)

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு செய்த கல்விக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நிறுவனத்தின் தலைவர் சுந்தரமூர்த்தி தீபராஜ் தலைமையில் கிளிவெட்டி மகா வித்தியாலயத்தின் தங்கத்துரை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி வெற்றிவேல், ஓய்வு நிலை அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிதி அனுசரணையாளர்கள் மு. பொன்னம்பலம், எஸ். புலேந்திரன், ஆ. ரவிச்சந்திரன் ஆகியோருக்கு விழாவின் போது பாராட்டு வழங்கப்பட்டது.

17 பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 300 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தில் மன்னாரில் கடற்கரை துப்புரவு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கிளீன் ஸ்ரீ லங்கா செயற்றிட்டத்தின் ஊடாக கடற் கரையோரங்களைச் சுத்தப்படுத்தும் செயற்றிட்டமானது மன்னார் மாவட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (23) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கீரிக் கடற்கரைப் பகுதியை சூழ உள்ள கரையோரங்கள் இன்று (23) முதல் கட்டமாக சுத்தப்படுத்தப்பட்டது.

மன்னார் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் நகரசபை, பிரதேச சபை, கடற்படை, பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து குறித்த சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன், தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால உட்பட பிரதேச செயலாளர்கள், நகரசபை, பிரதேசசபைச் செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக நூற்றுக் கணக்கான பொதுமக்களும் இணைந்து சுத்தப்படுத்தல் பணிகளில் ஈடுபட்டனர்.

அதே நேரம் மன்னார் பிரதான பாலம், சௌத்பார் கடற்கரை பகுதிகளும் இன்றைய தினம் கிளீன் ஸ்ரீ லங்கா செயற்றிட்டத்தின் ஊடாகச் சுத்தம் செய்யப்பட்டது.



## தமிழோசை ஆனந்தி :

# தாயக அவலங்களை உலகுக்கு வெளிப்படுத்திய ஒலிபரப்பாளர்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

தமிழ் ஒலிபரப்புத்துறையில் ஒரு முன்னோடியாக இருந்த "ஆனந்தி அக்கா" பிபிசி தமிழ் சேவையில் இணைந்த முதல் தமிழ்ப் பெண்மணியாக பல தடைகளைத் தாண்டி பிபிசி தமிழோசையின் இயக்குநராக உயர்ந்த பெருமைக்குரியவர்.

பல ஆண்டுகளாக தாயக மக்களுக்கு செய்திச் சேவையை தொடர்ந்து வழங்கி வந்த பிபிசி 'ஆனந்தி அக்கா' பெப்ரவரி 21 இல் லண்டனில் இயற்கை எய்தினார்.

'தமிழோசை ஆனந்தி' என தமிழ் உலகம் அறிந்திருக்கும் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் பி.பி.சி தமிழோசையில் பணியாற்றிவந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவரான ஆனந்தி சூரியப்பிரகாசம், இலங்கை வானொலியில் உருவான பல நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றார். அத்துடன் அக்காலத்தில் வானொலியில் சிறந்த அறிவிப்பாளராகவும் திகழ்ந்தார்.

இங்கிலாந்துக்கு 1970 காலகட்டத்தில் குடிபெயர்ந்த ஆனந்தி சூரியப்பிரகாசம் பி.பி.சி தமிழோசையின் பகுதிநேர அறிவிப்பாளராக ஆரம்பத்தில் பணியாற்றி வந்தார். பின்னர் , நிரந்தர அறிவிப்பாளராகிப் பொறுப்புகள் ஏற்றுச் செயற்பட்டார்.

மூன்று தசாப்தங்களாக பி.பி.சி. தமிழோசையில் பணியாற்றிய அனுபவம் கொண்ட அவர் பல இளைய தலைமுறையினரை ஊக்குவித்து பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

இறுதியாக அவர் தமிழோசையில் இருந்து ஓய்வு பெற்றாலும், தமிழர் கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளில் இனித்த முகத்துடன் எப்போதும் காணலாம்.

போர்க் காலத்தில் பல செய்தித் தணிக்கைகள் மத்தியிலும் தாயக மக்களுக்காக களத்தில் நிகழும் நிகழ்வுகளை தொகுத்து உடனுக்குடன் வழங்கி வந்தார்.

பி.பி.சி. தமிழோசையில் ஆனந்தி சூரியப்பிரகாசம் பணியாற்றிவந்த காலத்தில் தாயக உறவுகளின் அவலங்களையும் தமிழோசை வாயிலாக உலகெங்கும் கொண்டு சென்றதில் பெரும் பங்கு வகித்தார்.

கொடூரமான போர் நடந்த காலத்தில் துணிகரமான தாயகம் வந்து தமிழ் மக்களின் உண்மை நிலையை உலகறியச் செய்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, பிபிசியின் சார்பில் முதன் முதலாக சந்தித்து, நேர்காணலை சர்வதேச ஊடகங்கள் மூலமாக வெளியிட்டார்.

தமிழர் உலகம் மாத்தரமன்றி, சர்வதேசம் எங்கும் அப்போது மூத்த ஊடகவியலாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்துடனான நேர்காணல் பலத்த வரவேற்பை பெற்றது.


லண்டனில் இருந்து கொழும்பு சென்றதுமே இலங்கை அரசின் கெடுபிடியை அவர் சந்தித்தார். அவரது பயணத்திட்டம் என்ன, பயணத்தின் நோக்கம் என்ன என்பது பற்றி எல்லாம் துருவித்துருவி விசாரிக்க ஆரம்பித்தார்கள். பின்னர் அவரைத் தொடர்ந்து கண்காணிக்கவும் செய்தார்கள்.

அப்போது வவுனியாவுக்கு முன் வரை மட்டுமே இலங்கை படைகளின் ஆதிக்கம் இருக்கும். அதன் பிறகு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிக்குள் வருவதற்குள் பல்வேறு தடைகளை அரசு ஏற்படுத்தி இருந்தது.

அதையெல்லாம் மீறி புலிகளுன் பாதுகாப்புப் பகுதிக்கு வந்த அவர் யாழ்ப்பாணத்தில் தேசியத் தலைவர் பிரபாகரனை சந்தித்தார்.

பலருக்கும் நினைவிருக்கும் அவருடைய நேர்காணலை உலகெங்கும் தமிழ் மக்கள் பார்த்து வியந்தனர். அந்த நேர்காணலின் பின்னரே பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி என்றார் பிபிசி புகழ் ஆனந்தி அக்கா.

தமிழ் கூறும் நல்லுலகம் ஆனந்தி அக்காவின் கணீரென்ற குரலை ஒரு போதும் மறவாது. தமிழ் கூறும் நல்லுலகுக்கு அரும் பணிபுரிந்த ஆனந்தி அக்காவுக்கு அஞ்சலிகளும் ஆராதனைகளும் உரித்தாகட்டும்!



# தெலுங்கானா சுரங்கப்பாதை சரிவு: சிக்கிக் கொண்ட 8 தொழிலாளர்கள்

தெலுங்கானாவில் கட்டுமானப் பணியில் இருந்த சுரங்கப்பாதையின் ஒரு பகுதி நேற்று சனிக்கிழமை இடிந்து விழுந்ததில் குறைந்தது எட்டு தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

தெலுங்கானாவின் ஸ்ரீசைலம் அணைக்கு பின்புறம் உள்ள சுரங்கப்பாதையின் ஒரு பகுதியில் கசிவை சரிசெய்ய சில தொழிலாளர்கள் உள்ளே சென்றபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

விபத்தினை அடுத்து சுரங்கத்தில் சிக்கி பல தொழிலாளர்கள் பாதுகாப்பாக வெளியேறினர்.

எனினும், எட்டு தொழிலாளர்கள் இன்னும் சுரங்கத்தில் சுக்கியுள்ளதாகவும், அவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை (SDRF) மீட்புப் படை தெரிவித்துள்ளன.

சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்களில் 4 பேர் ஜார் கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், இருவர் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவர் ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்தவர் மற்றும் ஒருவர் பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



மீட்பு நடவடிக்கைகளுக்காக இந்திய இராணுவம் தனது பொறியாளர் பணிக்குழுவையும் விரைவாக பணியமர்த்தியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, இராணுவ பொறியாளர் பணிக்குழுவானது விபத்து நடந்த இடத்தில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.





# ஜார்கண்டில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி கும்பமேளாவுக்குச் சென்ற அறுவர் உயிரிழப்பு

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தின் தன்பாத் மாவட்டம் தலுதிஹ் அருகேயுள்ள தேசிய நெடுஞ்சாலையில் நேற்று சனிக்கிழமை பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் உள்ளிட்ட அறுவர் உயிரிழந்தனர்.

மேலும் இந்த விபத்தில் 07 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மகா கும்பமேளாவில் புனித நீராடுவதற்காக பிரயாக்ராஜுக்குச் சென்று கொண்டிருந்தபோது சனிக்கிழமை அதிகாலை 1:15 மணியளவில் இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த அனைவரும் மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்தின் கவுகாட் பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள சத்வேதிஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பழுதடைந்த டிரக் மீது வேகமாக வந்த எஸ்யூவி வாகனம் முதலில் மோதியதன் பின்னர் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விபத்தின் பின்னர், உடனடியாக அப்பகுதியில் ரோந்து வந்த பொலிஸார் உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.



# ரஷ்ய- அமெரிக்க பிரதிநிதிகள் இடையேயான 2 ஆவது சந்திப்பு அடுத்த இரு வாரங்களுக்குள்

ரஷ்யா மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு இடையேயான இரண்டாவது சந்திப்பை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரஷ்யத் துணை வெளியுறவு அமைச்சர் சேர்ஜி ரியாப்கோவை மேற்கோள் காட்டி அந்த நாட்டின் அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக யுக்ரைனில் இடம்பெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் ரஷ்யா மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளிடையே கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை இடம்பெற்றது. போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரச் சந்திப்பின் போது அமெரிக்க - ரஷ்ய இருதரப்பு உறவுகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது யுக்ரைன் போரில் தீர்வை எட்டுவதற்கான முக்கிய நோக்கமாகக் கருதப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வாரம் ரஷ்ய மற்றும் அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






# போப் பிரான்சிஸின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடம்

கத்தோலிக்க திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் , மூச்சுக்குழாய் அழற்சி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார்.

வைத்திய பரிசோதனையில் அவருக்கு நுரையீரலில் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவாரம் கடந்த நிலையில், தற்போதுவரை அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 23/02/2025

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கால்கரியில் ஒருவர் பலி

கால்கரி நகரின் தென்கிழக்கு பகுதியில் உள்ள Red Carpet பகுதிக்கு அருகில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை 02





# வீடுகளில் பனியை அகற்ற அரசு உதவி

**டொரோண்டோவின் தொடர்ச்சியான பனிப்புயலால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள், தங்கள் வீட்டு முற்றம், நடைபாதை மற்றும் அடைப்புகளிலிருந்து பனியை அகற்றுவதற்கு நகராட்சி சேவையைப் பெற 311 இலக்கம் மூலமாக கோரிக்கை விடுக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. பின்வரும் வழிகளில் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. டொரோண்டோ நகர இணையத்தளம் அல்லது 311 அழைப்புக் கோரி செய்யலாம்.**

இந்த சேவையை பெற, நகராட்சி நடைபாதை பனிநீக்க சேவையுடன் இணைந்த இடங்களில் இருப்பது அவசியம். (குறிப்பாக எடோபிகோ, நார்த் யோர்க், மற்றும் ஸ்கார்பரோ ஆகிய பகுதிகள் இதற்குள் வருகின்றன.

வீதிகளில் பணி அகற்றியதன் பின்னர் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

வீட்டின் முன்பாக உள்ள பனி அடுக்கு குறைந்தது 25 செ.மீ. உயரம் இருக்க வேண்டும்.

நகராட்சி அதிகாரிகள், இந்த முறை மூன்று பெரிய பனிப் புயல்களுக்கு பிறகு பனியால் மூடப்பட்ட நகரின் முக்கிய இடங்களைத் துப்புரவாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

450 இற்கும் மேற்பட்ட டிரக் (dump trucks) பனியை நகரத்தின் ஐந்து முக்கிய சேமிப்பு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக பணியமர்த்தப்பட்டுள்ளன.

முதன்மையாக மருத்துவமனைகள், முக்கிய வீதிகள், சாலையோர நுழைவாயில்கள், பஸ்கள் நிற்கும் இடங்கள் மற்றும் பள்ளி பகுதிகள் துப்புரவாகும், அதன் பிறகு மட்டுமே குடியிருப்பு பகுதிகள் கவனிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.












# டொரோண்டோவில் நகர்ப்பணியாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட வாய்ப்பு

டொரோண்டோ நகரின் 27,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் மார்ச் 8 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிர்வாகம் அவர்களை பணிநீக்க நடவடிக்கைக்கு உட்படுத்தலாம் என குறிப்பிடப்படுகின்றது.

ஒன்றாரியோ தொழில் அமைச் சிற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான முரண்பாட்டினால் இந்த வேலை நிறுத்தம் முன்னெ டுக்கப்பட உள்ளது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீர்வு கோரப்பட்டுள்ளது.

எனினும், இந்த கோரிக்கைகளுக்கு நிர்வாகத் தரப்பிலிருந்து இதுவரை யில் சாதக பதில்கள் எதுவும் கிடைக் கவில்லை.

இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.




## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10:30 மணியளவில், கால்கரி பொலிஸாருக்கு 17வது அவென்யூ S.E. 6200 பகுதியிலுள்ள வீட்டில் அசம்பாவித நிலைமை குறித்து அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலி ஸாரை நோக்கி ஒரு ஆண் ஓடி வந்துள்ளார்.

ஒரு அதிகாரி அவரை கட்டுப்படுத்த முயன்ற நிலையில், மற்றொரு அதிகாரி துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்தவருக்கு பொலிஸார் உடனடியாக முதலுதவி அளித்தாலும், அந்த நபர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் பொலிஸாருக்கோ அல்லது ஏனைய பொதுமக்களுக்கோ காயம் ஏற்படவில்லை. சம்பவத்தின் போது வீட்டில் மற்றொருவர் இருந் துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

அல்பேர்டா குற்ற விசாரணை அமைப்பு (ASIRT) இந்த சம்பவம் தொடர் பிலான விசாரணையை ஆரம்பித்துள் ளது.









# கனடா பிரதமர் பதவிக்கான போட்டியில் இருந்து இந்திய வம்சாவளி பெண் ரூபி தல்லா தகுதிநீக்கம்

கனடாவின் லிபரல் கட்சியின் தலைமைப் போட்டியில் இருந்து இந்திய வம்சாவளி அரசியல்வாதியான ரூபி தல்லா தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த முடிவு நாட்டின் அடுத்த பிரதமராகும் அவரது முயற்சியை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

தகுதி நீக்கம் குறித்து தல்லா தனது அதிருப்தியை வெளிப்படுத்தி, இது ஏமாற்றமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு ஊடகங்களுக்கு கசிந்ததாகவும், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தவறானவை மற்றும் ஜோடிக்கப்பட்டவை என்றும் அவர் கூறியுள்ளார்.

தனது அதிகரித்து வரும் ஆதரவு கட்சியில் சில சிலருக்கு அச்சுறுத்தலாக மாறியதாக தல்லா சூசகமாகக் கூறியுள்ளார்.

வெளிநாட்டு தலையீடு மற்றும் பிரச்சார விதி மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் .

சக வேட்பாளர் மார்க் கார்னி என்பவர் போட்டியிட தான் தடையாக இருப்பதாலேயே இந்த நடவடிக்கை என்றும் ரூபி குற்றம் சாட்டியுள்ளார்.





# கனடாவின் மிகப்பெரிய தங்கக்கொள்ளை: இந்திய சந்தேகநபர் மீது அதிரடி விசாரணை

கனடாவில் நடந்த மிகப்பெரிய தங்கக்கொள்ளையில் தொடர்புடைய சந்தேக நபர் மீது இந்தியாவில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கனடாவில் 22.5 மில்லியன் டொலர் மதிப்புள்ள தங்கம் கொள்ளை நடந்த விவகாரத்தில், மொஹாலியில் வசிக்கும் 32 வயது சிம்ரன் ப்ரீத் பனேசர் மீது இந்திய அமலாக்கத்துறை (ED) சோதனை நடத்தியுள்ளது.

அவரும் அவரது மனைவியும் கனேடிய குடிமக்கள் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம், 2023 ஏப்ரல் மாதம் நடந்தது. 6,600 தங்கப் பட்டிகள் (மொத்தம் 400 கிலோ தங்கம்) மற்றும் 2.5 மில்லியன் டொலர் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

பனேசர், அந்த நேரத்தில் Air Canada-வில் செயல் மேலாளராக (acting supervisor) பணியாற்றியுள்ளார்.

கனடாவின் பீல் பிராந்திய பொலிஸார், இந்திய ED அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

பனேசர், கொள்ளைக்குப் பிறகு மூன்று மாதங்களில் கனடாவை விட்டு வெளியேறியுள்ளார். அவர் மற்றும் அவரது மனைவி கடந்த ஒரு வருடமாக இந்தியாவில் வசித்து வருகின்றனர்.

பனேசரின் மனைவி முன்னாள் 'Miss India Uganda' காஸ்க்கியாவார். மற்றும் அவர் பாடகி மற்றும் நடிகையும் ஆவார்.

அவர்கள் இந்தியாவில் ஒரு பிரபலமான பஞ்சாபி நடிகருடன் இணைந்து ஒரு திரைப்படத்தை தயாரிக்க திட்டமிட்டிருந்தனர்.

திரைப்படத்திற்கான முதலீடு எங்கே இருந்து வந்தது என்பதையும் ED ஆய்வு செய்யவுள்ளது.

பனேசர், ஏர் கேனடாவில் பணியாற்றுவதற்கு முன்பு பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் சக்கர நாற்காலி சேவை நிறுவனத்தில் ஆறு ஆண்டுகள் வேலை செய்துள்ளார்.

விமான நிலையத்தின் உள் செயல்பாடுகளை நன்கு அறிந்தவர் என்பதால், கொள்ளையில் அவரின் பங்கு இருக்கலாம்எனசந்தேகிக்கப்படுகிறது.

ED அதிகாரிகள், பனேசர் மற்றும் அவரது மனைவியை மறுபடியும் விசாரிக்க திட்டமிட்டுள்ளனர்.

இந்த தங்க கொள்ளை தொடர்பான பிரம்மாண்ட பணப்பரிமாற்றங்கள் மற்றும் பணமோசடிகள் குறித்து இந்திய-கனடா அதிகாரிகள் இணைந்து தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.